www.Padasalai.Net www.Trb Tnpsc.com

No. of Printed Pages : 8

4476925 **7601**

பதிவு எண் 4 4 1 9 4 5 5

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** மற்றும் **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** துன்பப்படுபவர் __________.

(அ) பொருளைக் காக்காதவர் (ஆ) தீக்காயம் பட்டவர்

(இ) நாவைக் காக்காதவர் (ஈ) தீயினால் சுட்டவர்

**2.** 'புல்லின் இதழ்கள்' - நூலின் ஆசிரியர் :

(அ) பாப்லோ நெரூடா (ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே

(இ) ரவி வர்மா (ஈ) வால்ட் விட்மன்

**3.** தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) கடல் + அலை – உயிர் + மெய்

(ஆ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்

(இ) மண் + வளம் – மெய் + மெய்

(ஈ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

[ திருப்புக

S. VIVEK P.G-TAMIL - KARUR - 79041-44418

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

4. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | தஞ்சை பெரிய கோயில் | (i) | திருச்சாழல் |
| (2) | சிங்கன் சிங்கி | (ii) | காலத்தை வென்ற கலை |
| (3) | பெண்கள் விளையாட்டு | (iii) | இசைத் தமிழர் இருவர் |
| (4) | சிம்பொனித் தமிழர் | (iv) | குற்றாலக் குறவஞ்சி |

(அ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)
(ஆ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)
(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

5. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
(அ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
(ஆ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
(இ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
(ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

6. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் :
(அ) ஆகஸ்ட் 9 (ஆ) ஜனவரி 18 (இ) மார்ச் 20 (ஈ) செப்டம்பர் 16

7. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு :
(அ) வினையெச்சம், வினைத்தொகை
(ஆ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
(இ) பெயரெச்சம், பண்புத்தொகை
(ஈ) வினைத்தொகை, இடவாகுபெயர்

8. **கூற்று** : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
**விளக்கம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
(அ) **கூற்று** தவறு, **விளக்கம்** சரி
(ஆ) **கூற்று** சரி, **விளக்கம்** தவறு
(இ) **கூற்றும்** தவறு, **விளக்கமும்** தவறு
(ஈ) **கூற்றும்** சரி, **விளக்கமும்** சரி

www.Padasalai.Net

4419455



**7601**

9. புலி போலப் பாய்ந்தான் - எவ்வகை உவமை ?
(அ) மெய் (ஆ) வினை (இ) உரு (ஈ) பயன்

10. ஓர் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றிப் பாடும் திணை :
(அ) பாடாண் திணை (ஆ) பொதுவியல் திணை
(இ) குறிஞ்சித் திணை (ஈ) வெட்சித் திணை

11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது :
(அ) கனி முன் நிரை (ஆ) காய் முன் நேர்
(இ) மாமுன் நேர் (ஈ) காய் முன் நிரை

12. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை :
(அ) சிவகாமியின் சரிதம் (ஆ) சிவகாமியின் சபதம்
(இ) பாஞ்சாலி சபதம் (ஈ) இரகசிய வழி

13. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை :
(i) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்
(ii) நேரடிப் பொருள்கள்
(அ) இரண்டும் சரி (ஆ) (i) மட்டும் சரி
(இ) இரண்டும் தவறு (ஈ) (ii) மட்டும் சரி

14. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் :
(அ) 22 (ஆ) 48 (இ) 18 (ஈ) 24

## பகுதி - II

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக. **3x2=6**

15. "வளருங் காவில் முகில் தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்"
- அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன ?

16. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை ?

S. VIVEK P.G. TAMIL - KARUR - 79041-44418

[ திருப்புக

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com